வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-நாராயணசாமி

தேதி 21.09.2025 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

மோடி அருணாச்சலபிரதேசம் (19)

பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை அருணாச்சலபிரதேசம் மற்றும் திரிபுராவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு சுமார் 5 ஆயிரத்து 100 கோடிக்கும் மேற்பட்ட முடிவுற்ற திட்டங்களை தொடங்கி வைக்க உள்ளார். அருணாச்சலபிரதேசத்தில் 3 ஆயிரத்து 700 கோடி ரூபாய்க்கு மேல் மதிப்புள்ள 2 பெரிய நீர் மின் திட்டங்களுக்கும் அவர் அடிக்கல் நாட்டுகிறார். இதில், 240 மெகாவாட் திறன் கொண்ட ஹியோ நீர் மின் திட்டம் மற்றும் அருணாச்சலபிரதேசத்தின் 186 மெகா வாட் திறன் கொண்ட டாட்டோ -1, நீர் மின் திட்டம் ஆகியவை அடங்கும். இது தவிர, தாவாங்கில் ஒரு அதி நவீன மாநாட்டு மையத்திற்கும் பிரதமர் அடிக்கல் நாட்டுகிறார். சுகாதாரம், தீயணைப்பு, பாதுகாப்பு மற்றும் பணிபுரியும் பெண்கள் விடுதிகள் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் ஆயிரத்து 290 கோடி ரூபாய் மதிப்புள்ள பல முக்கிய உள்கட்டமைப்பு திட்டங்களையும் தொடங்கி வைக்கிறார். தொடர்ந்து, ஹிட்டா நகரில் நடைபெறும் பொது கூட்டத்திலும் அவர் உரையாற்றுகிறார். மேலும், ஜிஎஸ்டி வரி விகிதம்

குறைப்பு குறித்து வர்த்தகர்கள் மற்றும் தொழில்துறை பிரதிநிதிகளுடன் கலந்துரையாடுகிறார். இதனையடுத்து திரிபுரா செல்லும் பிரதமர் அங்கு புனித யாத்திரை, புத்துணர்ச்சி மற்றும் ஆன்மீக பாரம்பரியம் திட்டத்தின் கீழ், மாதாபாரியில் உள்ள மாதா திரிபுர சுந்தரி கோவில் வளாகத்தில் மேம்பாட்டு பணிகளை தொடங்கி வைக்கிறார்.

சேவா சப்தாஹ்- -1 (6)

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு, மக்கள் சேவை- நல்லாட்சி என்ற தாரக மந்திரத்தின் அடிப்படையில், நாட்டில் மாற்றங்களையும் முன்னேற்றத்தையும் கொண்டு வர, அயராது உழைத்து வருகிறது. நாடு முழுவதும் விவசாயிகளுக்கு தரமான சேவையை வழங்கி வரும் பிரதான் மந்திரி கிசான் மான் தன் யோஜனா குறித்து இன்று, சேவைத் திருவிழா என்னும், இந்த சிறப்பு தொடரில் காண்போம். ……….

(வாய்ஸ்)

*சேவா சப்தாஹ்- -2 (7)*

(வாய்ஸ்)

<u>இந்தியாவின் பொருளாதாரம் மற்றும் கலாச்சாரத்தின் முதுகெலும்பாக விவசாயம் உள்ளது. இது, கோடிக்கணக்கான குடும்பங்களை வறுமையில் இருந்து மீட்டெடுக்கிறது. கடந்த 11</u>

ஆண்டுகளில் வேளாண் அமைச்சகத்தின் பட்ஜெட் கிட்டத்தட்ட 25 ஆயிரம் கோடியில் இருந்து 1 லட்சத்து 37 ஆயிரம் கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது. பிரதமர் திரு நரேந்திர மோடி கோட்டை கொத்தளத்தில் இருந்து பிரதான் மந்திரி கிசான் மான் தன் யோஜனா திட்டம் குறித்து ஆற்றிய உரையில், ……

( பிரதமர் வாய்ஸ்)

*சேவா சப்தாஹ்- -3 (19)*

இந்திய விவசாயிகள் தான் அரசின் மிகப் பெரிய முன்னுரிமை என்றும், விவசாயிகளின் நலன்களில் எந்த சமரசமும் செய்யப்படாது என்றும் தெரிவித்துள்ளார். விவசாயிகளின் நலன்களை உறுதி செய்வதற்காக தொடர்ந்து செயல்பட்டு வரும் அரசு கடந்த 11 ஆண்டுகளில் காரிப் பயிர்களுக்கான குறைந்த பட்ச ஆதரவு விலையை 81 சதவிகிதம் முதல் 226 சதவிகிதம் வரை கணிசமாக அதிகரித்துள்ளது. விவசாயிகளுக்கு நிதி பாதுகாப்பை உறுதி செய்வதற்காக அரசு பிரதான் மந்திரி கிசான் சம்மன் நிதியை தொடங்கி, கடந்த 6 ஆண்டுகளில் 3 லட்சத்து 90 ஆயிரம் கோடி ரூபாய்க்கும் அதிகமான தொகையை வழங்கி உள்ளது. சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு பிரதான் மந்திரி கிசான் மான் தன் யோஜனா மூலம் மாதந்தோறும் 3 ஆயிரம் ரூபாய் ஓய்வூதியம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் சுமார் 25 லட்சம் விவசாயிகள்

சேர்ந்துள்ளனர். மேலும், கிசாக் கிரடிட் கார்டு திட்டத்தின் கீழ், கடன் வரம்பு 5 லட்ச ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் இதுவரை 10 லட்சம் கோடி ரூபாய் மதிப்புள்ள கடன் வழங்கப் பட்டுள்ளது. விவசாயிகள் மற்றும் உணவு பாதுகாப்பிற்கான திட்டங்களில் பிரதான் மந்திரி ஃபசல் பீமா யோஜனா, பிரதான் மந்திரி கிரிஷிஜ சீஞ்சாய் யோஜனா, விவசாய உள் கட்டமைப்பு நிதி, பிரதான் மந்திரி கிசான் சம்ரிதி கேந்திரங்கள், தேசிய விவசாய சந்தை ஆகியவை அடங்கும்.

*ராஜ்நாத் சிங்* (11)

மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் இன்று மொராக்கோ நாட்டிற்கு பயணம் மேற்கொள்கிறார். இந்த பயணத்தின் போது அவர் பாதுகாப்பு மற்றும் தொழில்துறையை மேம்படுத்த அந்நாட்டு பிரதிநிதி திரு அப்தெல்டிஃப்- உடன் பேச்சுவார்த்தை நடத்த உள்ளார். அவரது பயணத்தின் போது அந்நாட்டின் டாடா அட்வான்ஸ் சிஸ்டம்ஸ் மரோக்கின் சக்கர கவச தளத்திற்கான புதிய உற்பத்தி வசதி தொடக்க விழா நிகழ்ச்சியிலும் அவர் பங்கேற்க உள்ளதாக அவர் தமது சமூக ஊடகப் பதிவில் தெரிவித்துள்ளார். இந்நிகழ்ச்சியின் போது அவர் ரபார்டில் உள்ள இந்திய சமூகத்தினருடனும் கலந்துரையாட உள்ளார். மேலும், பாதுகாப்புத்

துறையில் ஒத்துழைப்பு குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தத்திலும் இருதரப்பினரும் கையெழுத்திடுவார்கள் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

*தர்மேந்திர பிரதான்* (16)

கல்வியை மேம்படுத்துவதற்கு மும்மொழிக் கொள்கை ஒரு வெற்றிகரமான வழிமுறை என்றும், எந்த மொழியையும் திணிக்கும் நோக்கம் மத்திய அரசுக்கு இல்லை என்று மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் தெரிவித்துள்ளார். இன்று சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மக்கள் தொகையில் 10 சதவிகிதம் பேர் மட்டுமே ஆங்கிலம் பேசுகிறார்கள் என்று தெரிவித்தார். ஒரு மாணவர் தாய்மொழி மற்றும் அவர்கள் விரும்பும் 2 மொழிகளை கற்க வேண்டும் என்றும் அவர் கூறினார். புதிய கல்விக் கொள்கை அமல்படுத்துவதற்கு முன்பே பல மாநிலங்களில் மும்மொழி கொள்கை அமலில இருந்தது என்றும் அவர் தெரிவித்தார். மத்திய அரசு வரும் 2047 ஆம் ஆண்டிற்குள் வளர்ச்சியடைந்த பாரத்தை உருவாக்க திட்டமிட்டு வருவதாகவும், அதன் கொள்கைகள் கவனமாக வரையறை செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். மதிய உணவு திட்டம் மற்றும் வயது வந்தோர்களுக்கு எழுத்தறிவு திட்டம் போன்றவற்றுக்கு தமிழக அரசு நிதி பெற்றுள்ளதாக அவர் தெரிவித்தார். புதிய கல்விக் கொள்கையை செயல்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்தும் அமைச்சர் சுட்டிக் காட்டினார்.

பியூஷ் கோயல் (12)

வேளாண்மை இந்திய நாகரீகத்தின் உயிர் நாடியாக திகழ்கிறது என மத்திய அமைச்சர் திரு பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர்வெளியிட்டுள்ள காணொளி காட்சி செய்தியில், அக்டோபர் 30 மற்றும் 31 ஆம் தேதிகளில் சர்வதேச அரிசி மாநாடு புதுடெல்லியில் உள்ள பாரத் மண்டபத்தில் நடைபெற உள்ளதாக தெரிவித்தார். இந்த மாநாட்டில் விவசாயிகள், வேளாண் பொருள் ஏற்றுமதியாளர்கள், கொள்கை வகுப்பாளர்கள் கலந்து கொள்ள உள்ளதாக அமைச்சர் தெரிவித்தார். இந்தியாவில் அரிசி பல்நோக்கு தன்மை, தர நிலைகள் மற்றும் வணிக தொடர்புகள் ஆகியவற்றை மேம்படுத்தும் வகையில் இந்த மாநாடு இருக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். இந்தியா 145 மில்லியன் மெட்ரிக் டன் அரிசி உற்பத்தி செய்து உலகின் 40 சதவிகித அரிசி தேவையை பூர்த்தி செய்து வருவதாக அமைச்சர் திரு பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

ஜிஎஸ்டி 1– (7)

பிரதமர் திரு நரேந்திர மோடி இவ்வாண்டு சுதந்திர தினத்தன்று, அடுத்த தலைமுறை ஜிஎஸ்டி சீர்திருத்தங்களை, டெல்லி செங்கோட்டை கொத்தளத்தில் இருந்து அறிவித்தார். சாதாரண மக்களின் வாழ்வை

எளிதாக்கும் வகையில் பல்வேறு துறைகளுக்கான வரி குறைப்பை, இம்மாதம் 3-ஆம் தேதி ஜிஎஸ்டி சபை அங்கீகரித்து, பிரதமரின் தொலை நோக்கு பார்வையை நிறைவேற்றியது. இதில் குறிப்பாக விவசாய துறையில் ஜிஎஸ்டி சீர்திருத்தங்கள் குறித்து இன்றைய தொகுப்பில் பார்க்கலாம்....

(வாய்ஸ்)

ஜிஎஸ்டி 2– (19) (வாய்ஸ்)

மறைமுக வரி முறையை 5 சதவிகிதம், 15 சதவிகிதம், 18 மற்றும் 28 சதவிகிதம் என 4 அடுக்கு அமைப்பில் இருந்து 5 சதவிகிதம் மற்றும் 18 சதவிகிதம் என இரண்டடுக்கு கட்டமைப்பாக ஜிஎஸ்டி கவுன்சில் எளிமைப்படுத்தி உள்ளது. புகையிலை மற்றும் ஆடம்பர பொருட்கள் உட்பட தேர்ந்தெடுக்கப்பட்ட பொருட்களுக்கு கூடுதலாக 40 சதவிகித வரி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. சாதாரண மக்கள், விவசாயிகள் மற்றும் விவசாயம், சுகாதாரம் மற்றும் பொருளாதாரத்தில் முக்கிய துறைகளை சேர்ந்தவர்களை மையமாக கொண்டு விகித பகுத்தறிவுக்கு ஜிஎஸ்டி கவுன்சில் ஒப்புதல் அளித்துள்ளது. புதிய கட்டமைப்பின் கீழ், மிக அதிக வெப்பநிலை கொண்ட பால், சேனா, பனீர், பீட்சா ரொட்டி, சப்பாத்தி உள்ளிட்ட உணவு பொருட்களுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. டிராக்டர்கள், அறுவடை இயந்திரங்கள் மற்றும் உரம் தயாரிக்கும்

இயந்திரங்கள் போன்ற விவசாய உபகரணங்களுக்கு ஜிஎஸ்டி 12 சதவிகிததில் இருந்து 5 சதவிகிதமாக குறைக்கப்பட்டுள்ளது. இது விவசாய துறையில் குறிப்பிட்ட முன்னேற்றமாக கருதப்படுகிறது. மத்திய அரசு இருசக்கர வாகனங்கள் மீதான ஜிஎஸ்டி வரியையும் குறைத்துள்ளது. 350 சிசி திறன் கொண்ட பைக்குகள் 28 சதவிகித்தில் இருந்து 18 சதவிகிதமாக குறைக்கப்பட்டுள்ளது. இந்த புதிய வரி விகிதங்கள் நாளை முதல் அமலுக்கு வரும் என அறிவிக்கப் பட்டுள்ளது.

*மகாளய அமாவாசை* (13)

நாட்டின் பல்வேறு பகுதிகளில் இன்று மகாளய அமாவாசை கடைபிடிக்கப்பட்டது. இதனை ஒட்டி, கடற்கரை உள்ளிட்ட புனித நீர்நிலைகளில் மக்கள், முன்னோர்களையும் நினைவு கூறும் வகையில் தர்பணம் செய்து வழிபட்டனர். புதுச்சேரி கடற்கரை காந்தி சிலை, வேதபுரிஸ்வரர் கோவில குளக்கரை, முத்தியால்பேட்டை பகுதியில் உள்ள செங்குந்தர் மரபினர் பூந்தோட்டம் உள்ளிட்ட இடங்களில் ஏராளமானோர் தங்களது முன்னோர்களுக்கு தர்பணம் அளித்து வழிபட்டனர். இதேபோல் வில்லியனூர் பகுதியில் பழமையான திருக்காஞ்சி கோவில் மற்றும் சங்கராபரணி ஆற்றங்கரையிலும் ஏராளமானோர் முன்னோர்களுக்கு தர்பணம் செய்தனர்.

இதனிடையே, பிரதமர் திரு நரேந்திர மோடி தமது எக்ஸ் தள பதிவில், துர்கா பூஜா நெருங்கி வருவதால் நமது வாழ்க்கை ஒளி வீசி சிறக்கட்டும் என கூறியுள்ளார். துர்கா தேவியின் அருள் நீடித்த மகிழ்ச்சி மற்றும் சிறந்த ஆரோக்கியத்தை தரட்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

வானிலை (8)

தென்னிந்திய பகுதிகளின் கீழ் நிலவும் வளி மண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக இன்று முதல் அடுத்த 6 நாட்களுக்கு தமிழகம், புதுவை, காரைக்கால் பகுதிகளில் இடி-மின்னலுடன் கூடிய லேசான மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. வட தமிழகத்தின் ஓரிரு இடங்களிலும், தென் தமிழகத்தின் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இன்று இடி-மின்னலுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மோடி உரை ()

நாளை புதியதாக அமலுக்கு வரும் ஜிஎஸ்டி வரி சீர்திருத்தம் குறித்து பிரதமர் திரு நரேந்திர மோடி சற்று முன்னர் ஆகாஷ்வாணியில் நாட்டு மக்களுடன் உரையாற்றினார். நாட்டில் வரி விகிதங்களை

குறைத்திருப்பது அன்னிய முதலீடுகளை ஈர்க்கும் என்று அவர் தெரிவித்தார். ஒரே நாடு – ஒரே வரி என்ற குறிக்கோளை ஜிஎஸ்டி சீர்திருத்தம் நிறைவேற்றி இருப்பதாகவும் பிரதமர் தெரிவித்தார். ஜிஎஸ்டி சீர்திருத்தத்தால் நடுத்தர மக்களும் இளைஞர்களும் அதிக அளவில் பயன்பெறுவர் என்றும் பிரதமர் தெரிவித்தார். நாளை முதல் இரண்டடுக்கு ஜிஎஸ்டி வரி மட்டுமே அமலில் இருக்கும் என அவர் உறுதி அளித்தார். இந்த சீர்திருத்த நடவடிக்கையால் மக்களின் அத்தியாவசிய பொருட்களின் விலை வெகுவாக குறையும் என்றும், உணவு, மருந்து, வீட்டு உபயோக பொருட்களின் விலையும் கணிசமாக குறையும் என்றும் பிரதமர் தெரிவித்தார். இதன் மூலம் இந்திய பொருளாதாரத்தின் புதிய அத்தியாயம் நாளை முதல் தொடங்க உள்ளதாகவும் பிரதமர் கூறினார்.